# புதுக்கோட்டை நகராட்சி

## புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்ட சாதாரணக்கூட்டம் மன்றப்பொருள்கள் நாள்:30.03.2022.

| | | |
|---|---|---|
| பொருள் எண்: | தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும், நமது மாவட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நமக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர் பெருமக்களுக்கும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்ளல். | தீர்மான எண்:1 மன்றத்தில் பதிவு செய்யலாம். |
| பொருள் எண்: 1 | நகராட்சி ஆணையாளர் பிப்ரவரி 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்:2 அலுவலக குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்: 2 | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளிலும், 1895 முதல் 2017 வரை விடுப்பட்டுள்ள பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் அனைத்தையும் UTIS மென்பொருளில் விடுதலின்றி பதிவேற்றம் செய்து, 31.03.2022க்குள் சான்றிதழ் அனுப்பி வைக்க ஏதுவாக, பணியின் அவசர அவசியம் கருதி, கணினி மற்றும் மனித ஆற்றல் மூலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.8,00,000/-க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ)விடுபட்டுள்ள பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் அனைத்தையும் UTIS மென்பொருளில் விடுதலின்றி பதிவேற்றம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெறவும், விலைப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1731/2022/எச்3) | தீர்மான எண்:3 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

பொருள்
எண்: 3

புதுக்கோட்டை நகராட்சியில், பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கு 2022-23ம் ஆண்டிற்கான, சாலை வரி மற்றும் ரொக்க தொகை சேவை கட்டணம் கீழ்கண்ட விவரப்படி, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டியுள்ளது.

| **வ. எண்** | **வாகனம் எண்** | **சாலை வரி** | **1 % ரொக்கத்தொகை** | |
|---|---|---|---|---|
| 1 | TN 55 C 8667 | ரூ.7500/- | ரூ.75/- | ரூ.10/- |
| 2 | TN 55 AF 7872 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 3 | TN 55 AP 1480 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 4 | TN 55 S 9236 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 5 | TN 55 AD 0085 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 6 | TN 55 AD 0076 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 7 | TN 55 AP 1467 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 8 | TN 55 Q 9050 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 9 | TN 55 AR 4314 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| 10 | TN 55 R 6520 | ரூ.3600/- | ரூ.36/- | ரூ.10/- |
| மொத்தம் | | ரூ.39,900/- | ரூ.399/- | ரூ.100/- |

மேற்கண்ட பத்து வாகனங்களுக்கும் சாலை வரி மற்றும் சேவை கட்டணம் ரூ..40,400/-

தீர்மான எண்:4
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | ரொக்கமாக செலுத்த வேண்டியுள்ளது. எனவே இத்தொகையை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இத்தொகையை வருவாய் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம். (ந.க.எண்:2272/2022/எச்2) | |
| பொருள் எண்: 4 | இந்நகராட்சியில் 42 வார்டுகளிலும் தினசரி உருவாகும் குப்பைகளை பிரித்து மறு சுழற்ச்சிக்காக பேட்டரி வாகனம் ( BOV) பயன்படுத்தப்பட்டு வருகிறது.. இந்த பேட்டரி வாகனம் பணிகளில் பயன்பாட்டில் உள்ளபோது இந்த வாகனங்கள் பழுதாகிவிடுகின்றன அடிக்கடி பழுது ஏற்பட்டுவிடுகிறது. எனவே இந்த வாகனங்களை உடனுக்குடன் பழுதுகளை சரி செய்திட ஓராண்டிற்கு (1.4.2022 முதல் 31.03.2023) வருடாந்திர பராமரிப்பிற்கு 25.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறத.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:2273/2022/எச்2) | தீர்மான எண்:5 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 5 | புதுக்கோட்டை நகராட்சியில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அத்தகை நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக திறந்த வெளியில் சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக ODFT சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுயஉறுதிமொழி சான்றிதழுக்கு நகராட்சி அனுமதித்துள்ளது. இதற்கு பொதுமக்கள் இந்நகராட்சிக்கு ODFT சான்று பெறுவது தொடர்பாக ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் ஆணையாளருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கக் கோரி மாலை முரசு தினசரி நாளிதழில் பிரசுரித்த வகையில் ஆன விளம்பரக்கட்டணம் ரூ. 14,700/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:29/2018/எச்1) | தீர்மான எண்:6 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்: 6 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது கடிதம் ந.க.எண். 42/2021/இ2, நாள். 08.02.2022ல், தூய்மை இந்தியா திட்டம் SWACHHATAM MIS – PORTAL ல், நகராட்சி எல்லைகள் வரைபடத்தில், (Shape File) பதிவேற்றம் செய்து அதன் விபரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, துப்புரவு ஆய்வர் திரு. என். லோகநாதன் அவர்களால் அவசர அவசியம் கருதி AATHAVAN CONSULTANCY , THIRUVARUR என்ற நிறுவனம் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், (துலா ரூ. 400/– வீதம் – 42 வார்டுகள் ) SWACHHATAM MIS – PORTAL ல், பதிவேற்றம் செய்தமைக்கான செலவுத்தொகை ரூ. 16,800/–ஐ , மேற்படி துப்புரவு ஆய்வர் மூலம் ரொக்கமாக , மேற்படி AATHAVAN CONSULTANCY , THIRUVARUR என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட செலவுத்தொகையை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டவிதி 1920, பிரிவு 15ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:11238/2021/எச்1) | தீர்மான எண்:7<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 7 | புதுக்கோட்டை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மருப்பிணி சாலையில் உள்ள கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தில் தனியார் கழிவுநீர் அகற்றும் ஊர்திகளால் கழிவுநீர் ஊற்ற ஒரு நடைக்கு கட்டணமாக தற்போது ரூ.30/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை நகராட்சியால் 18.03.2022 அன்று காலை 11.00 மணி அளவில் நகர்மன்ற தலைவர் தலைமையில் நகர்மன்றத் துணைத்தலைவர் முன்னிலையில் நகராட்சி ஆணையர், நகர் நல அலுவலர் மற்றும் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு அலுவலர்களால் கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வு ஆலோசனை கூட்டத்தில் நிர்வாக நலன் கருதி ஒரு நடைக்கு ரூ.100/- ஆக 1.4.2022 முதல் கட்டணம் உயர்த்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தொகையை வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (எச்1/2270/2022) | தீர்மான எண்:8<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. ஆனால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று நடை 1க்கு ரூ.100/- என்பதை குறைத்து ரூ.50/- நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 8 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 03, கைவண்டி தொழிலாளர் நகர் செல்லும் வழியில் உள்ள முனிக்கோவிலுக்கு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 86 (C) ன்படி வரி விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்:9<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு ..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:1924/2020/அ1) | |
| பொருள் எண்: 9 | இந்நகராட்சி கம்பன் நகர் வரி வசூல் மையத்தில் ரூபாய் நோட்டு எண்ணும் இயந்திரம் பழுது அடைந்ததால் வசூல் பணியில் மிகவும் சிரமம் ஏற்பட்ட நிலையில் நிர்வாக அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் அலுவலர் திருமதி. வே. விஜயா ஸ்ரீ அவர்களால் அன்னை சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் மூலம் அவ்வியந்திரம் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பழுது கட்டணமான ரூ. 6450/— திருமதி வே. விஜயாஸ்ரீ அவர்களால் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட தொகையினை பிரிவு 15ன் கீழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:4636/2020/அ1) | தீர்மான எண்:10 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 10 | இந்நகராட்சி அலுவலக பொறியில் பிரிவு குடிநீர் டேங்கர் லாரி TN558893-க்கு தகுதிச்சான்று காலம் 1.04.2022-வுடன் முடியவுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br><br>மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகள் சீர் செய்ய வாகனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட்டதில் வாகனத்தில் உள்ள பழுதுகள் சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.1,10,000/- தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி வாகனம் பழுது சீர் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி வாகனம் பழுது சீர் செய்ய மோட்டார் வாகன பராமரிப்பு அரசாணையில் | தீர்மான எண்:11 அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை விட கூடுதலாக ஆகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:1874/2022/இ3) | |
| பொருள் எண்: 11 | உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதால் இந்நகராட்சியின் உள்ளாட்சி தேர்தல் செலவுக்கு ரூ.40.00 லட்சத்திற்கு இந்நகர்மன்றம் 29.10.2021ம் தேதிய தீர்மான எண்:289ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி உள்ளாட்சி தேர்தல் 19.02.2022 ஆம் தேதி நடைபெறுவதால் அவசர அவசியம் கருதி வாக்குச்சாவடி மையங்களில் பிளக் பாய்ண்ட் மின்விசிறி பழுதடைந்துள்ளதால், மேற்படி பணிகளை செய்ய ரூ.5.18 (ரூபாய் ஐந்து லட்சத்தி பதினெட்டாயிரம் மட்டும்) லட்சத்தில் பணிகளை செய்ய தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.கே. பரமசிவம் அவர்களை கல்வி நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக் குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மேற்படி பணியை மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி செய்த்ததை மன்றம் அனுமதிக்கலாம்.. (4870/2021/இ1) | தீர்மான எண்:12<br>அலுவலக குறிப்பு 1 மற்றும் 2<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 12 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் வாகனம் Jett Rodding TN 55 AP 7600 Thermo Plastic Jetting Hose பிரசர் கேஜ் மீட்டர் மாற்றும் பணிக்கு கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>1. M/s. S.S. Services & Construction Company Rs.3,42,247/-<br>2. Shark Engineering & Services Rs.2,95,890/-<br>3. Bharath Industries Rs.3,29,745/-<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) குறைவான விநியோகம் செய்ய விலைப்புள்ளி கொடுத்துள்ள Shark Engineering & Services, Coimbatore நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்:13<br>அலுவலக குறிப்பு அ, ஆ, இ<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இ) மேற்படி செலவினம் பாதாளச் சாக்கடை நிதியில் இருந்து (குடிநீர் மற்றும் வடிகால் நிதி ) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:14182/2002/இ1) | |
| பொருள் எண்: 13 | இந்நகராட்சி வார்டு 40 கற்பகா நகர் மற்றும் வார்டு எண். 25 ஜானகி நகர் பகுதிக்கு புதிதாக பகிர்மான குழாய் அமைக்கவும், 90 MM கேட்வால்வு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 84,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும், இப்பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு. எஸ். கணேசன் மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:10425/2021/இ1) | தீர்மான எண்:14<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 14 | இந்நகராட்சி காந்தி நகர், சின்னப்பா நகரில் 100mm வால்வுகள் மாற்றம் செய்யவும் , கம்பன் நகர் சேஷையா சாலை , சின்னப்பா நகர் பிரதான குழாய் லீக் சரிசெய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 48,500/—க்குமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு. எஸ். கணேசன் மூலம் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதை ஏற்கலாம். (ந.க.எண்:10425/2021/இ1) | தீர்மான எண்: 15<br>அலுவலக குறிப்பு 1, 2<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 15 | இந்நகராட்சி மச்சுவாடி , பூங்கா நகர் மற்றும் பெரியார் நகரில் உள்ள சுலீஸ் வால்வுகள் பழுது நீக்கம் செய்து மீண்டும் பொருத்தம் செய்திடவும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 40,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:16<br>அலுவலக குறிப்பு 1, 2<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு. எஸ். கணேசன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்:10425/2021/இ1) | |
| பொருள் எண்: 16 | மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களது கடிதம் ந.க.எண். 543/2021, நாள். 29.12.2021ல், 01.01.2022 முதல் 15.01.2022 முடிய இரண்டு வார காலத்திற்கு சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழா கொண்டாடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக அதிகம் அறியப்படாத 75 சுதந்திரப்போராட்ட வீரர்களின் நிழற்படங்கள் அடங்கிய பதாகை தயார் செய்யப்பட்டு, அப்பதாகைகளை மக்கள் கூடும் இடத்தில் காட்சிப்படுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், SMJR CONSTRUCTION PUDUKKOTTAI என்ற நிறுவனத்திடம் அவசர அவசியம் கருதி நேரடியாக வாய்மொழி மூலம் மேற்படி விளம்பர பதாகைகள் 2 நகராட்சி அலுவலக நுழைவு வாயிலிலும், புதிய பேருந்து நிலைய நுழைவு வாயிலிலும் வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி பதாகைகள் வைக்கப்பட்டது. அதற்கான செலவினத்தொகையாக ரூ. 16,000/– (8000 /– + 8000/–) ற்கு தொகைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவுத்தொகையை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டவிதி 1920, பிரிவு 15ன் கீழ், மேற்படி SMJR CONSTRUCTION PUDUKKOTTAI என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..**<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:520/2022/சி3) | தீர்மான எண்:17<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்: 17 | இந்நகராட்சி காந்தி நகரிலிருந்து போஸ் நகர் செல்லும் சாலை கடந்த மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சாலையினை கிராவல் மற்றும் GSB கொண்டு தற்காலிகமாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 4,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு ..**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும், அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:18<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>(ந.க.எண்:1615/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்: 18</td><td>இந்நகராட்சி அலுவலகம் மற்றும் அரசு ARR கிரவுண்ட் பகுதியில் குடியரசு தினவிழா கொண்டாடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி தற்காலிக கழிப்பறை மற்றும் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.40,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு ..<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு. பி. சின்னக்கருப்பையா அவர்கள் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:10425/2021/இ1)</td><td>தீர்மான எண்:19<br>அலுவலக குறிப்பு 1,2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்: 19</td><td>இந்நகராட்சி கீழ்க்கண்ட இடங்களில் குடிநீரின்அவசியத்தினை முன்னிட்டு பொதுமக்களின் பொதுநலன் கருதி சிறு மின் விசை பம்பு அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table>
<tr><td>1.</td><td>வார்டு எண் 19, மேல மேட்டுத்தெரு, வடக்குப்புறம் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண் 20, மேல மேட்டுத்தெரு, தென்புறம் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 21 திருவப்பூர் பெரிய வீதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண். 05 கோவில்பட்டி கீழ தெருவில் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
<tr><td>5.</td><td>வார்டு எண். 10 மச்சுவாடி வண்டிப்பேட்டையில் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
<tr><td>6.</td><td>வார்டு எண். 3ல் பாலாஜி நகரில் ஆழ்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல்.</td><td>ரூ. 2,25,000/—</td></tr>
</table></td><td>தீர்மான எண்:20<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு ..**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும், பின்வரும் திட்ட நிதிகளில் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்:12026/2020/இ1) | |
| பொருள் எண்: 20 | **புதுக்கோட்டை நகர்மன்ற் தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் செல்லும் சாலை (புது அரண்மனை சாலை) மற்றும் (PLA பெட்ரோல் பங்க் அருகில்) மதுரை சாலை சந்திப்பில் தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை அமைத்திட தமிழக அரசிடமிருந்து அதற்கான அனுமதி பெற இந்நகர்மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:21 மன்றம் பதிவு செய்யப்பட்டது அரசுக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது. |

**ஓம்/. செ . திலகவதி, பி.காம்.,**
**நகர்மன்றத் தலைவர்,**
**நகர்மன்றம், புதுக்கோட்டை**

/உண்மை நகல்/

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி.